

# மக்களின் செழிப்பிற்கு முன்னுரிமை!

## நெகிரி செம்பிலான் சமஸ்தானாதிபதி வலியுறுத்தல்

(துர்க்கா)

சிரம்பான், மே 8- நெகிரி செம்பிலான் மாநிலத்தையும் மாநில மக்களையும் முதன்மைப் படுத்துங்கள் என்று சமஸ்தானாதிபதி துவாங்கு முக்ரிஸ் இப்னி அல்மர்ஹூம் துவாங்கு முனாவிர் கேட்டுக்கொண்டார்.

நெகிரி செம்பிலான் மாநில சட்டமன்றத்தின் 15ஆவது மாநில சட்டப் பேரவையின் இரண்டாவது தவணையின்முதல் கூட்டம் நேற்று மாநில சட்டமன்றத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத் தொடரை மாநில சமஸ்தானாதிபதி துவாங்கு முக்ரிஸ் இப்னி அல்மர்ஹூம் துவாங்கு முனாவிர் தொடக்கி வைத்து உரையாற்றினார்.

நெகிரி செம்பிலான் மாநிலத்தில் மிகவும் ஏழ்மையான நிலையில் இருந்த 3,530 பேரின் எண்ணிக்கை இப்போது அந்த எண்ணிக்கை பூஜியத்திறகு வந்துள்ளதை சுட்டிக்காட்டி மாநில அரசாங்கத்திற்கு வாழ்த்துகளை மாநில சமஸ்தானாதிபதி தெரிவித்துக் கொண்டார். கடந்த 2022ஆம் ஆண்டு நெகிரி செம்பிலான் மாநில அரசாங்கத்தின் பொருளாதாரம் 8.9 பில்லியனாக இருந்தது. ஆனால் 2023ஆம் ஆண்டு அதன் பொருளாதாரம் 10.1 பில்லியனாக உயர்வு கண்டுள்ளது. மாநில ஒற்றுமை அரசாங்கத்தை அவர் பாராட்டுவதாக கூறினார்.

இந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் நெகிரி செம்பிலான மாநில மந்திரி பெசார் டத்தோஸ்ரீ உத்தாமா அமினுடின் ஹருண், மாநில ஆட்சிக்குழு உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். மாநில சட்டமன்ற கூட்டத் தொடர் ஐந்து தினங்களுக்கு தொடர்ந்து நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.



## கோலகுபுபாரு இடைத்தேர்தல்: